**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.994/2023

வா.சா.1 கிரிராஜ்குமார் த/பெ குப்புசாமி

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

1. பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றதாக சொல்லும்தேதிக்கு 5 வருடங்களுக்கு முன்பே வழக்கு காசோலை தொலைந்துவிட்டதாக வங்கிக்கு கடிதம் கொடுத்துவிட்டதால் என்னிடம் வழக்கு காசோலை கொடுத்து கடன் பெற்றதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் 2016க்கு பின்னிட்டு பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் குறிப்பிடும் தேதியில் பிரதிவாதி கடன் பெற்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்ததாக கூறும் கடன் தொகைக்கு 12 சதவீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டார் என்று வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 12 சதவீத வட்டிக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எவ்வளவு பூமி உள்ளது என்றால் 6,7 ஏக்கர் உள்ளது. மேற்படி அந்த பூமி நல்ல விளைச்சல் தரும் பூமி ஆகும்.

3. மேற்படி பூமியின் சந்தை மதிப்பு ரூ.7,00,00,000/– என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தன்னுடைய பூமியை விற்பனை செய்ய முயற்ச்சித்தார் என்று கூறியுள்ள நிலையில் அது யாரிடம் எப்போது என்று என்ற விபரம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. இந்த பிரதிவாதிக்கு கடன் வாங்க அவசியமும் ஏற்படவில்லை சொத்துக்களை விற்க அவசியமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கும்,

பிரதிவாதிக்கும் 2016ம் வருடம்  வரவு, செலவு கணக்குகளில் ஏற்பட்ட மன வருத்தம் காரணமாக ஏற்கனவே நான் எடுத்து வைத்திருந்த காசேலையை வங்கியில் தாக்கல் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலைக்கு எந்த பிரதிபலனும் இல்லை என்பதாலும் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை